செய்தி வெளியீடு எண்:1283 நாள்:06.12.2021

<u>செய்தி வெளியீடு</u>

# தமிழ் நாட்டில் குழந்தைகள் மற்றும் பெண்களிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்தசோகை குறித்து ஊடக துறையினருக்கு எடுத்துரைக்கும் கருத்தரங்கம்

அகில இந்திய அளவில், சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குடும்ப நல கணக்கெடுப்பின்படி, (NFHS–5) சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து செயல்பாடுகளில் தேசிய சராசரி குறியீடுகளை விட தமிழ் நாட்டில் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடுகளான குள்ளத்தன்மை மற்றும் மெலிவுத்தன்மை ஆகியவற்றில் முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால், தமிழ் நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே இரத்தசோகை அதிகமாகவும், சமுதாயத்தில் பச்சிளம் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவு ஊட்டும் பழக்கங்கள் குறித்த விழிப்புணர்வு குறைவாகவும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மக்களிடையே பல்வேறு விழிப்புணர்வு முயற்சிகள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊடக துறையில் பணிபுரிபவர்களுக்கு, நமது மாநிலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக, செயல்படுத்தப்படும் சத்துணவு, சுகாதார திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் குறித்த தகவல்களை ஊடகங்கள் மூலம் மக்களுக்கு அளிக்கவும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. தமிழகத்தை ஊட்டச்சத்து பற்றாக்குறை இல்லாத மாநிலமாக மாற்றிட எடுக்கப்படும் முயற்சிகளின் தொடர்ச்சியாக ஊடகத் துறையினருக்கான இக்கருத்தரங்கம் சென்னையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட துறையால் சிறப்பாக நடத்தப்பட்டது.

இப்பணியரங்கு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் அவர்களால் தலைமை ஏற்கப்பட்டது, பெண்கள் மற்றும் குழந்தைகளின் நிலையை மேம்படுத்திட தமிழக அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு செயல் திட்டங்கள் பற்றியும், ஊடகத் துறையின் பங்கினையும் மிக சிறப்பாக எடுத்துரைத்தார். மேலும், ஒருங்கிணைந்த குழந்தை

வளர்ச்சி திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 'குழந்தையின் முதல் ஆயிரம் நாட்களின் முக்கியத்துவம் மற்றும் வளரிளம் பெண்களின் கவனிப்பு' ஆகிய இரண்டு விழிப்புணர்வு குறுபடங்களை வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

திருமதி. V. அமுதவல்லி, இ.ஆ.ப, இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் தேசிய ஊட்டச்சத்து குழுமம் பற்றியும் மற்றும் பணியரங்கின் நோக்கம் பற்றியும் விளக்கினார்கள்.

பின்வரும் அரசு உயர் அலுவலர்களால் பங்கேற்பாளர்களுக்கு மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது திருமதி.D.ரத்னா, இ.ஆ,ப, இயக்குநர், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை, திருமதி. S. வளர்மதி, இ,ஆ,ப, இயக்குநர், சமூக பாதுகாப்புத் துறை, Dr. தாரேஸ் அஹமது, இ.ஆ.ப குழும தலைவர், தேசிய சுகாதார இயக்கம், திரு. A. அண்ணாதுரை, இ.ஆ.ப இயக்குநர், வேளாண்மைத் துறை, திருமதி. அமுதவல்லி, இணை இயக்குநர், கல்வித் துறை. மேலும், செல்வி. ரஞ்சிதா குணசேகரன், துணை ஆசிரியர், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ், ஆகியோர் பாலின வன்முறை மற்றும் உணர்திறன் அறிக்கை அளித்தல் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். நன்றியுரை திருமதி. K.கண்மணி, இணை இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்துறை அவர்களால் கூறப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**